பாடம் 1
**இலக்கணம்**
நடவடிக்கை 4

**பனுவலிலுள்ள ன்று, ந்து என முடியும் வலிமிகா வினையெச்சச் சொற்றொடர்களை அடையாளங்கண்டு எழுதுக.**

ஆகஸ்டு 6ஆம் திகதி 1945, காலை 8.16 மணியளவில் ஹிரோஷிமா நகரின் மத்தியப் பகுதியில் 1900 அடி உயரத்திலிருந்து பன்னிரண்டரைக் கிலோ டன் எடையுள்ள சக்திவாய்ந்த அணுக்குண்டு ஒன்று போடப்பட்டது. அந்த நகரம் முழுவதும் நொடிப் பொழுதில் சேதமடைந்தது. இப்பேரிடர் பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொன்று குவித்தது. மேலும், பலர் கதிர்வீச்சினால் பாதிக்கப்பட்டனர். ஹிரோஷிமா நகரக் குடிமக்கள் தங்கள் உடைமைகளை இழந்து கலங்கினர்.

குண்டு விழுந்த இடத்திலிருந்து பதினேழு மைல் தொலைவிலிருந்த சன்னல்கள் கூட உடைந்து சிதறின. அணுக்குண்டு வெடித்த சமயத்தில் பெய்த மழை அதன் கதிரியக்கத்தைத் தரைக்குக் கொண்டு வந்து சேர்த்தது.

இத்துயரச் சம்பவத்தில் சுமார் ஒரு லட்சத்து முப்பதாயிரம் பேர் இறந்து போயினர். அந்நாட்டுத் தலைவர் அவ்விடத்தைச் சென்று பார்த்தார்; மீளாத்துயரில் ஆழ்ந்து போனார். இருப்பினும், ஹிரோஷிமா இன்று உலகில் வளர்ச்சி அடைந்த நகரங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது.

- ______________________________
- ______________________________
- ______________________________
- ______________________________
- ______________________________
- ______________________________
- ______________________________

LIVEWORKSHEETS